# என் மறைக்கல்வி ஆசானுடன்



# ஒரு பயணம்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

# முன்னுரை

அன்பார்ந்தவர்களே! தமிழக திருஅவை இந்த ஆண்டை “எல்லாருக்கும் மறைக்கல்வி” என்ற உயர் சிந்தனையோடு மறைக்கல்வி ஆண்டாக நமக்குத் தந்துள்ளது. மதிப்பீடுகள் மங்கி, நீதிநெறிகள் புறந்தள்ளப்பட்டு வரும் நவீன காலத்தில், காலத்தின் அறிகுறிகளை அறிந்து, கருத்தாய் செயல்பட இறைவன் விடுக்கும் கட்டாய அழைப்பு இது. இந்த சிலுவைப்பாதை பயணத்தில் நாம் இயேசு என்னும் மறைக்கல்வி ஆசானுடன் பயணிக்கவுள்ளோம். அன்று இந்தப் பயணத்தில் கலந்து கொண்ட பலர் இயேசுவை ஏளனத்துடன் பார்த்தனர், எள்ளி நகையாடினர். ஆனால் இன்று நாம் நமது அனுதாபக் கண்களை கொண்டு அவரை பார்க்க இருக்கிறோம். அவரது இரக்கத்திற்காக செபிக்கவுள்ளோம். அவரது பயணத்தில் ஆறுதல் கூறவுள்ளோம். இந்த பயணத்தில் பல மனிதர்களையும் சந்திக்க இருக்கிறோம். அவர்கள் நம்முடன் பேச இருக்கின்றனர். நாம் என்றோ கற்றுக்கொண்ட மறைக்கல்வி பாடங்களை நமக்கு நினைவுபடுத்தவும், இந்த மறைக்கல்வி ஆண்டில் நாம் செய்ய தவறியவற்றை சுட்டிக்காட்டவும் உள்ளனர்.

என்றும் வானம் நீலமாக இருக்கும் என்றோ,
பாதை நிறைய பூக்களே இருக்கும் என்றோ
இறைவன் வாக்குத் தரவில்லை
மழையில்லாத வெயிலோ
கவலையில்லாத மகிழ்வோ
வேதனையில்லாத சாதனையோ உண்டாகுமென்று
இறைவன் வாக்குத் தரவில்லை
ஆனால்,
இறைவன் உறுதி தருவது
முனைப்புக்களுக்கான சக்தியை!
உழைப்பிற்கான நிறைவை!
பாதைக்கான வெளிச்சத்தை!

நாமும் அந்த வாழ்வின் பாதைக்கான வெளிச்சத்தை நோக்கி மறைக்கல்வியோடு பயணிப்போம் ..............



எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## முதல் நிலை - இயேசு சிலுவை சாவிற்கு தீர்ப்பிடப்படுகிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
“அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்; வேதனையுற்ற மனிதராய் ஆனார்; நோயுற்று நலிந்தார்; காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார். அவர் இழிவுபடுத்தப்பட்டார்; அவரை நாம் மதிக்கவில்லை” – எசாயா: 53: 3

சிந்தனை:
“தீர்ப்பிடாதே தீர்ப்புக்கு உள்ளாவாய்” என்ற இயேசுவுக்கே தீர்ப்பளிக்கும் ஒரு வினோத நிகழ்ச்சி. பாவமே அறியாத, பிறர் பாவங்களை மன்னித்த பரமனுக்கே தீர்ப்பு வழங்கப்படுகிறது. அவர் வாழ்வில் நடந்த அதே தீர்ப்பு இன்று நம் வாழ்விலும் நிகழ்கிறது. இன்றைய உலகில் எப்படியும் வாழலாம் என்று பல சட்டங்கள் தினம் தினம் வந்துகொண்டுதான் இருக்கின்றன. ‘நாம் இப்படித்தான் வாழ வேண்டும்’ என்று மறைக்கல்வி நமக்கு பாடம் புகட்டுகிறது. நாம் சிறுவர்களாக இருந்தபோது ‘ஏன் இந்த மறைக்கல்வி?’ என்று நினைத்துக்கொண்டே படித்திருக்கலாம். பெரியவர்கள் ஆன பின் ‘இன்னும் ஏன் மறைக்கல்வி?’ என்று முணுமுணுத்திருக்கலாம். ஆனால் நம் வாழ்வின் ஒரு நொடியில் ‘நான் மறைக்கல்வி கற்றதால் தான் என்னால் இந்த செயலை சாதிக்க முடிந்தது’ என்ற எண்ணம் வரும். வணக்கத்திற்குரிய திருத்தந்தை 2ம் ஜான் பால் ‘நம்பிக்கை வாழ்வை ஊட்டி நிறைவாழ்வுக்கு கொண்டு செல்வது மறைக்கல்வி’ என்று கூறியுள்ளார். மறைக்கல்வி ஆழமான விசுவாசத்திற்கு அஸ்திவாரம். அந்த மூலைக்கல் வலுவாக இருந்ததால் தான் பலர் நம் திருமறைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்தனர். நாமோ “நமக்கு ஏன் இந்த ஊர் வம்பு” என்ற மனநிலையோடு பல நேரங்களில் வாழ்கின்றோமே! இந்த சந்தர்பங்களில் எல்லாம் நாமும் இயேசுவை தான் தீர்ப்பிடுகிறோம். பல வேளைகளில் நம் கண்களில் உள்ள மரக்கட்டையை பாராமல் பிறர் கண்களில் உள்ள துரும்பை மட்டுமே பார்ப்பவர்களாக இருக்கிறோம். இது தான் மறைக்கல்வியில் நாம் கற்ற பாடமா? சிந்திப்போம் .................

செபம்:
அநியாய தீர்ப்புக்கு ஆளான இயேசுவே! மறைக்கல்வி எங்களை துடிப்புள்ள மக்களாக மாற்ற விழைகிறது. நாங்கள் கோழைகளாக வாழாமல் உண்மைக்கு சான்றுபகருபவர்களாக, நீதிக்கு குரல் கொடுப்பவர்களாக, பிறருக்கு வாழ்வளிப்பவர்களாக மாறும் வரம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## இரண்டாம் நிலை – இயேசுவின் மீது பாரமான சிலுவையை சுமத்துகிறார்கள்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
“நம் ஆண்டவருக்கு நீ சான்று பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவையில்லை; கடவுளின் வல்லமைக்கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள்” - 2 திமொத்தேயு: 1: 8

சிந்தனை:
“நம்பிக்கை தரும் சிலுவையே நீ மரத்துட்சிறந்த மரமாவாய்; உன்னைப் போன்று தழை பூ கனியை எந்த காவும் ஈந்திடுமோ? இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ .....” இப்பாடல் சிலுவையை ஒரு இனிய சுமை என்று கூறுகிறது. ஆனால் அக்காலத்தில் சிலுவை ஒரு அவமானத்தின் சின்னமாகவே கருதப்பட்டது. இயேசு சுமந்த சிலுவை சுமார் 34கிலோவிலிருந்து 57 கிலோவாக இருந்திருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இக்காலத்தில் நமக்கு சிலுவையாக இருப்பது என்ன தெரியுமா? செபம் செய்வது, ஆலயத்திற்கு வருவது, அன்பிய கூட்டங்களில் கலந்து கொள்வது, மறைக்கல்வி வகுப்புக்கு செல்வது போன்றவை.
ஒரு மறைக்கல்வி வகுப்பில் ஆசிரியர் ஒருவர் 10ம் வகுப்பு படிக்கும் மாணவனிடம் தொடக்க செபம் சொல்ல கேட்டுக்கொண்டார். அவனோ “எனக்கு வெட்கமாக இருக்கிறது” என்று பதிலளித்தான். பின்னர் பிற மாணவ மாணவியரிடம் செபம் சொல்லும்படி கேட்டார். அனைவரும் செபம் சொல்ல தயங்கினர். ஒவ்வொரு பிள்ளைக்கும் முதல் பள்ளி குடும்பம் என்னும் பல்கலைகழகமே! இது மறைக்கல்வி பாடத்திற்கும் பொருந்தும். பல ஆண்டுகளுக்கு முன் நம் கத்தோலிக்க குடும்பங்களில் மாலை 7 அல்லது 8 மணிக்கு குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து செபம் செய்தனர். இது அவர்களை இறைவனுடன் ஒன்றிக்க செய்தது. குடும்பத்தில் இறைபக்தியையும், ஒழுக்கத்தையும் வளர்த்தது. ஆனால் இன்று குடும்பம் முழுவதும் தொலைகாட்சியில் ஐக்கியமாகிவிட்டது. தொடர் நாடகங்களை கண்டு அழுவதற்கும், விளையாட்டு போட்டிகளை கண்டு ஆர்ப்பரிப்பதற்கும் நேரம் சரியாக இருக்கிறது. நம்மை பார்த்து சிலுவை சுமக்கும் இயேசு ஏக்கத்துடன் கூறுவது: “ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?” சிந்திப்போம் ...........

செபம்:
“என் சுமை எளிது; என் நுகம் இனிது” என கூறிய இயேசுவே! நாங்கள் எம் பெற்றோர், பெற்றோரின் பெற்றோர் எங்களுக்கு கொடுத்த விசுவாசத்தை எம் பிள்ளைகளுக்கும் கொடுத்து, திருப்பலி, மறைக்கல்வி, குடும்ப செபம், அன்பியம் போன்றவற்றில் ஆர்வமுடன் பங்கேற்கும் வரம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## மூன்றாம் நிலை – இயேசு முதல் முறை தரையில் குப்புற விழுகின்றார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை: "நான் தடுமாறி விழும் நிலையில் இருக்கிறேன்; நான் எப்போதும் வேதனையில் உள்ளேன்" – திருப்பாடல்: 38: 17

சிந்தனை:

மழைத்துளி விழுகின்றது – மண் வளமடைகின்றது, அருவி விழுகின்றது – ஆறாக பாய்த்தோடுகின்றது, பழுத்த இலை விழுகின்றது – இளம் தளிர் உருவாகுகிறது. வீழ்ச்சி எழுச்சி ஆகிய இரண்டுமே வாழ்கைக்கு தேவை. இயேசு வீழ்ந்தபோது அவருக்கு கைகொடுக்க வெகு சில கைகளே விரைந்தன. ஆனால் நாம் வீழ்ந்தால் நம்மை தூக்கிவிடுவதற்கு பல உள்ளன. ஜென்ம பாவத்தில் வீழ்ந்துகிடக்கும் போது – நம்மை கடவுளுக்கும் திருச்சபைக்கும் பிள்ளைகளாக்கும் திருமுழுக்கு, ஐயத்தில் வீழ்ந்து கிடக்கும் போது – சத்திய வேதத்தில் திடப்படுத்தி தூய ஆவியின் அருள் கொடைகளை, வரங்களை, கனிகளை தரும் உறுதிபூசுதல், ஆன்ம பசியில் வீழ்ந்து கிடக்கும் போது – கிறிஸ்துவின் திருவுடலையும், திரு இரத்தத்தையும் உணவாக தரும் நற்கருணை, பாவக்குழியில் வீழ்ந்து கிடக்கும் போது – இறைவனின் மன்னிப்பையும், இனி பாவம் செய்யாமல் இருக்க அருளையும் தரும் ஒப்புரவு, மரண அச்சத்தில் வீழ்ந்து கிடக்கும் போது – ஆன்மாவிற்கும் உடலுக்கும் ஆறுதலை உண்டாக்கி மறுவாழ்விற்கு தயாரிக்கும் நோயில் பூசுதல், இறைமக்கள் உலக வழிகளில் வீழ்ந்துகிடக்கும் போது – திருப்பலி மற்றும் அருள் அடையாளங்கள் மூலம் இறைவனை வழங்க குருத்துவம், தனிமையில் வீழ்ந்துகிடக்கும் போது – தம்பதிகள் மனப்பூர்வமாக ஒருவருக்கொருவர் தங்களை கையளிக்கவும், பிரமாணிக்கமாக வாழவும், தங்கள் பிள்ளைகளை இறைவழியில் வளர்க்கவும் வேண்டிய அருளை தரும் திருமணம். கத்தோலிக்க வாழ்க்கைக்கு இத்திருவருட்சாதனங்கள் மிகவும் முக்கியமானவை. அன்பின் முழு வடிவமாக திகழும் இறைவன் தன் அன்பை, அருளை மனுகுலத்திற்கு வழங்க அவர் தேர்ந்தெடுத்த ஒரு மிகச்சிறந்த ஊடகம் தான் அருள் அடையாளங்கள். "உலகம் முடிவு வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன்" என்று சொன்ன இயேசு நாம் விழுகின்ற நேரங்களில் அருளடையாளங்களைப் பெறுவதன் மூலம் நம்முடன் இருக்கிறார் என்பதை உணரலாம். பிறப்பு முதல் இறப்பு வரை இவை தொடர்வதால் நம் வாழ்வே ஒரு அருள் அடையாளம் எனலாம். நம்மை புனிதப்படுத்த, கிறிஸ்துவின் மறையுடலை கட்டியெழுப்ப, இறைவனை புகழ உதவும் அருள் அடையாளங்களை நாம் உணர்ந்து பெறுகின்றோமா? சிந்திப்போம் .............

செபம்:

அருள் அடையாளங்களினால் எம்மை திடப்படுத்தும் இயேசுவே! நாங்கள் விழும் போது இவ்வருட்சாதனங்கள் எம்மை தூக்கி நிறுத்துகின்றன என்பதை உணர்ந்து வாழும் வரம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## நான்காம் நிலை – இயேசு தன் தாயை சந்திக்கிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:

**"இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்; எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்"**

– லூக்கா 2: 34 - 35

சிந்தனை:

தாயும் சேயும் சந்திக்கும் இந்த நிலையில் யார் யாருக்கு ஆறுதல் கூறியிருப்பார்? கள்வனை போல சிலுவை சுமக்கும் மகனை கண்ட அன்னையின் நிலை எவ்வாறு இருந்திருக்கும்????? 'குழந்தையின் துன்பம் கண்டு கலங்காத அன்னை இல்லை, ஆறுதல் சொல்வதற்கோ வார்த்தைகள் ஏதும் இல்லை. அன்னையின் பார்வையில் நம்பிக்கை தீபம், இயேசுவின் நெஞ்சினில் வலிமையின் வேதம் .... சந்திப்பு நிகழ்ந்ததம்மா ........'

ஆம் அன்னை துயருற்று துடித்திருப்பார். ஆனாலும் அன்று "இதோ உமது அடிமை உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்று அவர் அளித்த வார்த்தைப்பாடு, இன்று அவரை ஒரு வீரத்தாயாகவே மாற்றியுள்ளது. தொடக்கம் முதல் இறுதிவரை இயேசுவின் பின் இருந்து அவரின் பணி வாழ்விற்கு உருதுணையாக இருந்தவர் அன்னை மரியாள். அன்னை மரியும் புனித சூசையப்பரும் இயேசுவின் மறைக்கல்வி ஆசான்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. பிள்ளைகளை ஞானவழியில் வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும். திருமண நாள் அன்று "நீங்கள் கடவுள் உங்களுக்கு தரும் பிள்ளைகளை அன்புடன் ஏற்று அவர்களை கிறிஸ்துவின் வழியில் திருச்சபையின் நெறிமுறைபடி வளர்ப்பீர்களா?" என்று குரு வினவிய போது, "ஆம்" என்று பதிலளித்திருப்பீர்கள். குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு – சத்தான உணவு, மன வளர்ச்சிக்கு – அன்பும் பாசமும், சமூக வளர்ச்சிக்கு – ஆரோக்கியமான உறவும் நட்பும், உலக வளர்ச்சிக்கு – கலையும் அறிவியலும், ஆன்ம வளர்ச்சிக்கு – மறைக்கல்வி. முழு வளர்ச்சி என்பது உடல் உள்ள ஆன்ம வளர்ச்சியே ஆகும். உலக கல்விக்கு தரும் முக்கியத்துவத்தை நாம் மறைக்கல்விக்கு தருகின்றோமா? மறைக்கல்வி கற்கும் ஆர்வத்தை நம் பிள்ளைகளிடம் ஊட்டுகிறோமா? பிள்ளைகளிடம் "ஏன் மறைக்கல்வி வகுப்பிற்கு வரவில்லை?" என்று கேட்டால், "திங்கள் முதல் சனி வரை பள்ளிக்கு செல்கிறோம். ஞாயிறு ஒரு நாள் தான் விடுமுறை. அந்த நாளிலாவது தூங்க வேண்டாமா!" என்று கூறுகின்றனர். பெற்றோருள் சிலர் "என் மகன் அல்லது மகள் படிக்க நிறைய இருக்கிறது. அவர்களுக்கு நேரமே இல்லை. அவர்கள் டியூஷன் போக வேண்டும்" என்று கூறுகின்றனர். இது தான் நாம் அன்று கொடுத்த வாக்குறுதியா? சிந்திப்போம் ......

**செபம்: அன்னையின் செல்ல மகனாகிய இயேசுவே! எம் பெற்றோர் தம் பிள்ளைகளின் ஆன்ம வளர்ச்சியிலும் அக்கரை கொண்டு வாழ வரம் அருளும். ஆமென்.**

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## ஐந்தாம் நிலை – இயேசு சிலுவை சுமக்க சீமோன் உதவுகிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
"கிறிஸ்து இயேசுவின் நல்ல படைவீரனைப் போன்று துன்பங்களில் பங்குகொள்"
– 2 திமொத்தேயு: 2: 3

சிந்தனை:
தன்னையே பிறருக்கு பகிர்ந்தளித்த இயேசுவின் சுமையை பகிர்ந்துகொள்ள ஆளில்லை. வருகிறார் சீமோன் தயக்கத்துடன். சீமோன் வயதானவராய் இருந்தாலும் அவர் செய்த செயல் அவரை ஒரு இளைஞனாகவே நம்முன் தோன்ற செய்கிறது. "இளைஞர் இளம் பெண்களே! பங்கில் உங்கள் செயல்பாடுகள் என்ன?" என்று ஒரு கூட்டத்தில் கேட்ட போது, "நாங்கள் கிறிஸ்மஸ் சமயத்தில் குடில் அமைக்க உதவி செய்வோம், ஆலயத்தை அலங்கரிப்போம், பங்கு திருவிழாவின் போது மாதா தேரை ஜோடிப்போம்" என்று கூடியிருந்த இளைய சமுதாயத்தினர் பதில் அளித்தனர். இந்த வேலைகளை செய்வது கடினம். பல மணி நேரம் செலவழிக்க வேண்டியிருக்கும், உடல் உழைப்பும் அதிகம் தேவைப்படும். ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் அலங்கரிக்கும் இளைஞர் இளம் பெண்களே! உங்களை நீங்கள் அலங்கரிப்பது எப்போது? கண்ணாடியின் முன் 5ல் இருந்து 15 நிமிடங்கள் வரை முக அழகை மேம்படுத்த செலவிடும் நாம் நம் அக அழகை மேம்படுத்த எவ்வளவு நேரம் செலவிடுகிறோம்? இறைவன் விருப்புவது உள்ளத்து உண்மையையே! "ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றால் இளையோருக்கு கிறிஸ்தவ மதிப்பீடுகளை புகட்ட வேண்டும். இளையோரில் கவனம் செலுத்துதலே ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கும் என எனது அனுபவத்தில் கற்றுக்கொண்டேன்", என்று இளையோரின் தந்தை புனித தொன்போஸ்கோ கூறியுள்ளார். அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் தன் மாணவ மாணவியரை நோக்கி இவ்வாறு கூறுவார்: 'உழைப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் – அது வெற்றியாக மாறும், சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள் – அது மிகப்பெரிய சக்தியை வழங்கும், உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்குங்கள் – அது உடல் நலமாக மாறும், படிக்க நேரம் ஒதுக்குங்கள் – அது போட்டிமிகுந்த உலகில் தனி உயரத்தை அமைத்துத்தரும், நட்புக்கென்று நேரம் ஒதுக்குங்கள் – அது மகிழ்ச்சியான பாதையை அமைத்து தரும், இலட்சியத்திற்கு நேரம் ஒதுக்குங்கள் – அது செல்வத்தை காலடியில் கொண்டு வந்து கொட்டும், பொது சேவைக்கு நேரம் ஒதுக்குங்கள் – அது அழியா புகழையும் ஆன்ம திருப்தியையும் தரும்.' இவை மட்டுமல்ல நாம் மறைக்கல்விக்கும் நேரம் ஒதுக்க வேண்டும் – அது நாம் வாழ்வில் சந்திக்கும் அனைத்து சவால்களிலும் வழித்துணையாக அமையும். நாம் இறைவனுக்காக எவ்வளவு நேரம் செலவிடுகிறோம் என சிந்திப்போம் ............. செபம்: இளைஞனான இயேசுவே! எங்கள் இளைஞர் இளம்பெண்கள் இந்த நவநாகரிக உலகில் உமது அடிச்சுவடுகளை பின்பற்றி உம்மை போல் துடிப்புடன், இறையரசை கட்டியெழுப்பும் ஆர்வம் கொண்டு வளர அருள் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## ஆறாம் நிலை – வெரோனிக்கா இயேசுவின் திருமுகத்தை துடைக்கிறாள்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
“அவரைக் கண்ட பலர் திகைப்புற்றனர்; அவரது தோற்றம் பெரிதும் உருக்குலைந்ததால் மனித சாயலே அவருக்கு இல்லாதிருந்தது” – எசாயா: 52: 14

சிந்தனை:
வறண்ட பூமிக்கு வான்மழை போல், வெந்து போன மனதுக்கு ஆறுதலான ஒரு வார்த்தையை போல், தள்ளாடி தடுமாறி சோர்ந்து போன இயேசுவின் முகத்தை வெரோனிக்கா துடைக்கிறார். கல்நெஞ்சம் படைத்த யூதர்கள் மத்தியில் கல்லுக்குள் ஈரமாய், ஈட்டியும் வாள்களும் கையில் ஏந்திய நய வஞ்சகர்களுக்கு மத்தியில் மனதின் ஓரத்தில் ஈரம் கசிந்த வீர நங்கை சரியானதை, சரியான நேரத்தில் துணிச்சலுடன் செய்கிறார். “ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும் போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, ‘நலமே சென்று வாருங்கள்; குளிர் காய்ந்து கொள்ளுங்கள்; பசியாற்றிக் கொள்ளுங்கள்;’ என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப் போலவே, நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்” என்று புனித யாக்கோபு தன் திருமுகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆம் நாம் கற்கும் மறைக்கல்வி நம்மை துணிச்சலுடன் செயல்பட அழைத்துச்செல்ல வேண்டும். இன்று செல்லும் வழியில் முட்கள் இருந்தால் அதனை தாண்டி செல்பவர்களாக இல்லையா நாம்! அடிபட்டு கிடப்பவர்களை கண்டாலோ, உதவி கேட்பவரை கண்டாலோ, அனுதாபத்தோடு நிறுத்திக்கொள்கிறோமே! மணிக்கணக்கில் செய்யும் போதனையைவிட ஒரு கணமே செய்யும் நன்மை எவ்வளவோ மேலானது. எனவே நம்மால் முடிந்த நன்மைகளை எல்லாம் செய்வோம், நம்மால் முடிந்த முறைகளில் எல்லாம் செய்வோம், நம்மால் முடிந்த இடங்களில் எல்லாம் செய்வோம், நம்மால் முடிந்த நேரங்களில் எல்லாம் செய்வோம், நம்மால் முடிந்த மக்களுக்கு எல்லாம் செய்வோம். இன்றைய உலகிற்கு நல்ல மதிப்பீடுகளைக் கொண்ட நற்சமூகம் தேவை, இயேசுவின் மனநிலையை கொண்ட மனிதர்கள் தேவை, உதவி புரிகின்ற உயர்ந்தவர்கள் தேவை, இறையாட்சி கனவு நனவாக நற்பயிற்சியில் ஈடுபட்டு நல்லுலகம் படைக்க மனிதர்களை உருவாக்க மறைக்கல்வி உதவுகிறது. நாம் கற்ற பாடங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கின்றோமா? சிந்திப்போம் .....

செபம்: செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய சொல்லித்தந்த இயேசுவே! தடைகள் நிறைந்த இந்த சமுதாயத்தில் சரியானதை சரியான நேரத்தில் செய்யும் துணிச்சலையும், நல்ல உள்ளத்தையும் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## ஏழாம் நிலை – இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:

"நம் தலைமைகுரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல; மாறாக, எல்லா வகையிலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டவர்; எனினும் பாவம் செய்யாதவர். எனவே, நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக." – எபிரேயர்: 4: 15 - 16

சிந்தனை:

"மனம் வலுவானது, உடல் வலுவற்றது" என்று பேதுருவிடம் இயேசு கூறினார். இப்போது தன் தந்தையின் திருவுளத்தை ஏற்று, கொடிய சாவிற்கு தம்மையே கையளிக்க கலங்காமல் முன்னேறுகிறார். ஆனால் நைந்து போன அவர் உடலால் அவருடன் ஒத்துழைக்க இயலவில்லை. மீண்டும் தவறி விழுகிறார். நிலமகள் தன் தலைவனை தாங்குகிறாள். இயேசு எத்தனை முறை விழுந்திருந்தாலும் நிலமகள் தாங்கியிருப்பாள். நாமும் எத்தனை முறை பாவம் என்னும் சேற்றில் விழுந்தாலும், "தந்தையே என்னை மன்னியும்" என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும். நம்மை மன்னித்து மீண்டும் ஏற்றுக்கொள்வார். இதற்கு இயேசு நிறுவிய அருட்சாதனம் தான் 'ஒப்புரவு'. இது ஒரு இறைநிகழ்வு. அப்போது நம் மனநிலை எவ்வாறு இருக்க வேண்டும்: 'உன்னை பிரிந்து எங்கோ சென்றேன், உந்தன் அன்பை மறந்து நின்றேன், உன்னோடு இருந்திட வேண்டும் உனதன்பில் வாழ வேண்டும். தந்தாய் தவறு செய்தேன் மன்னித்து என்னை ஏற்றிடுவாய்.' ஆம் நொறுங்கிய குற்றமுணர்ந்த இதயத்தை இறைவன் ஏற்க மறுப்பதில்லை. இருவர் ஒரு கயிரை பிடித்துக்கொண்டிருக்கிறனர். அது இரண்டாக துண்டிக்கப்படுகின்றது. அவர்கள் மீண்டும் அதை இணைக்கின்றனர். இப்போது அவர்களுக்கு இடையே உள்ள இடைவெளி குறைகிறது. அந்த கயிரை துண்டிக்க துண்டிக்க அவர்கள் பிரிக்கப்படுகின்றனர். அதை இணைக்க இணைக்க அவர்கள் இடையே உள்ள இடைவெளி குறைகிறது. அதைபோல நமக்கும் இறைவனுக்கும் இடையே ஒரு உடன்படிக்கை உள்ளது. நாம் அவர் மக்கள் அவர் மேய்ச்சலின் ஆடுகள். நாம் பாவம் செய்யும் போது அந்த உறவு துண்டிக்கப்படுகிறது. ஒப்புரவு என்னும் அருட்சாதனத்தின் மூலம் மீண்டும் இணைகிறோம். இப்போது அந்த உறவு இன்னும் நெருக்கமானது. ஒவ்வொரு முறையும் நாம் பாவம் செய்ய செய்ய இறை உறவை இழக்கின்றோம். ஆனால் பாவசங்கீர்த்தனம் இழந்த உறவை வலுப்படுத்துகிறது. இந்த அருட்சாதனத்தில் பாவங்கள் மன்னிக்கப்படுவதோடு நமது ஆன்மாவில் இறைவனின் அருளை அதிகரிக்கிறது. நாம் பாவசங்கீர்த்தனம் செய்து எத்தனை நாட்கள், மாதங்கள், வருடங்கள் ஆகிவிட்டன. வருடத்திற்கு ஒரு முறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து தேவநற்கருணையை உட்கொள்வது என்பது திருச்சபை நமக்கு வழங்கிய கட்டளை. அதை நாம் கடைப்பிடிக்கின்றோமா????????? சிந்திப்போம்.

செபம்: உயிர் விடும் முன் "தந்தையே இவர்களை மன்னியும்; இவர்கள் அறியாமல் செய்கின்றனர்" என்று மொழிந்த இயேசுவே! எம் பாவங்களை உணர்ந்து நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யும் மனம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

# எட்டாம் நிலை – எருசலெம் மகளிருக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:

“ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்: நீ அழுகையை நிறுத்து; கண்ணீர் வடிக்காதே; ஏனெனில் உனது உழைப்புக்குப் பயன் கிடைக்கும். உன் எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில் நம்பிக்கை உண்டு” - எரேமியா: 31: 16

சிந்தனை:

தீயில் கருகிக்கொண்டிருக்கும் திரியின் துயரை காண சகியாது, மெழுகு அழுததாம். திரி மெழுகைப் பார்த்து, ‘நான் எரிந்து ஒளி கொடுக்கவே உண்டாக்கப்பட்டேன். எனக்காக நீ அழுவது வீண்’ என்று கூறியதாம். இத்தகைய ஒரு நிகழ்வே இங்கு நடக்கிறது. இயேசுவுக்கு ஆறுதல் கூற வந்த பெண்களுக்கு, அவர் “எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்” என்றார். நாமும் எருசலெம் மகளிரைப்போல் இயேசுவுக்கு ஆறுதல் கூற நினைக்கலாம். நமக்கும் இறை இயேசு அதே அறிவுரையை பகருகிறார். கடவுள் நாம் தரும் காணிக்கைகளை எதிர்ப்பார்ப்பவர் அல்ல. மாறாக நல்ல கிறிஸ்தவ வாழ்வையே நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார். தொடக்கக்கால கிறிஸ்தவர்களின் வாழ்வு முறை இன்று நம்மிடையே இருக்கிறதா? ‘அவர்கள் கற்பிப்பதிலும், உறவாடுவதிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டல் செய்வதிலும் உறுதியாக நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிலும் ஈர்ப்பு தோன்றியது அவர்களைப் பார்த்து.’ இன்று நமது வாழ்க்கை பிறரை ஈர்க்கின்றதா? தொடக்க கால கிறிஸ்தவ வாழ்க்கையை மீண்டும் மலர செய்ய உருவாக்கப்பட்டவையே இன்றைய அன்பியங்கள். அன்பியங்கள் மறைக்கல்வி மையங்களாகவும் செயல்படுகின்றன. முத்திபேறுபெற்ற திருத்தந்தை 2ம் ஜான் பால் “அன்பியங்கள் திருச்சபையின் உயிர்துடிப்புள்ள ஓர் அடையாளமாகும். நற்செய்தி அறிவிப்புக்கும், பயிற்சிக்கும் ஒரு கருவியாகும். இதுவே புதிய சமுதாயத்தின் தொடக்கமாகும். அன்பியங்களில் பங்கேற்கும் ஒவ்வொருவருக்கும் சமூக அனுபவமும், தானே செயல்படுவதாகிய நிறைவும், பொது செயல்களில் பங்கேற்புக்கான அனுபவமும் கிடைக்கின்றன” என்று கூறுயுள்ளார். அன்பியம் குறித்த நமது உள்ளுணர்வு என்ன? அன்பியங்கள் உருவாக்கப்பட்டும் முழு அன்பு பரிமாற்றம் இன்னும் நடைபெறவில்லையே! இயேசுவுக்கு எருசலெம் மகளிர் ஆறுதல் கூறினர். அன்றும் இன்றும் பெண்கள் கூட்டமே நம் ஆலயங்களில், அன்பியக்கூட்டங்களில் பங்குகொள்கின்றனர். ‘எல்லாருக்கும் மறைக்கல்வி’ அதாவது பிள்ளைகள், இளைஞர் இளம்பெண்கள், திருமணமானவர்கள், முதியோர் என அனைவரும் இதில் அடங்குவர். இதை நாம் உணர்கின்றோமா????? சிந்திப்போம் ................ செபம்: அன்பு பணிக்கென தன்னையே கையளித்த இயேசுவே நாங்கள் அன்பியம் காலத்தின் கட்டாயம் என உணர்ந்து அதில் ஆர்வமுடன் பங்கேற்கும் அருள் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## ஒன்பதாம் நிலை – இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
“அவர்கள் விழுந்தாலும் வீழ்ந்து கிடக்கமாட்டார்கள் ஆண்டவர் அவர்களைத் தம் கையால் தூக்கி நிறுத்துவார்” - திருப்பாடல்: 37: 24

சிந்தனை:
இயேசு கல்வாரி குன்றை நெறுங்கிவிட்டார். கால்கள் கடுக்கின்றன, கைகள் நடுங்குகின்றன, கண்கள் பஞ்சடைகின்றன. உடல் சக்தி மிகவும் குறைந்துவிட்டது. தள்ளாடுகிறார். தடுமாறுகிறார். தடுமாற்றம் எழுச்சியின் தொடக்கம். நாமும் ஆன்ம சக்தி இழந்து நிற்கும் போது நம்மை திடப்படுத்த வருபவை: இறைவார்த்தையும், நற்கருணையும்.
இறைவன் தன் மக்களுக்கு எழுதிய காதல் கடிதம் இறைவார்த்தை. சில வீடுகளில் விவிலியம் ஒரு பாதுகாப்பு பெட்டகம். அதில் தான் பணம், செக்புக், ரேஷன் அட்டை மற்றும் இதர முக்கிய குறிப்புகளை வைத்திருப்பார்கள். ஒரு சிலருக்கு அது ஒரு தூசி தாங்கி. வீடு சுத்தம் செய்யும் போது எடுத்து தூசி தட்டிவிட்டு வைப்பார்கள். அனால் இந்த உதாரணங்களுக்கு மாறாக ஒரு சில வீடுகளில் ‘ஆளுக்கொரு விவிலியம் நாளுக்கொரு அதிகாரம்’ என்பதை கொள்கையாக வைத்திருப்பார்கள். விவிலியம் ஒரு காட்சி பொருள் அல்ல. வீட்டின் மூலைகளை அலங்கரிக்க. அனால் உயிருள்ள இறைவனின் வார்த்தைகளை தாங்கிய ஒரு புதையல். அதை மகிழ்ச்சியாக இருக்கும் போது படியுங்கள் உங்கள் மகிழ்வை இரட்டிப்பாக்கும், துன்பப்படும் நேரங்களில் வாசித்துப்பாருங்கள் துன்பம் படிப்படியாக குறையும், அச்சத்தில் அனுகுங்கள் அச்சம் அகலும், கோபமாக இருக்கும் போது படியுங்கள் ஆழ்கடலின் அமைதி கிடைக்கும். திருச்சபை நாம் விழும் நேரங்களில் நம்மை திடப்படுத்த அளிக்கும் மற்றோரு கொடை ‘நற்கருணை’. அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், முந்திரிப்பழ இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் இயேசு கிறிஸ்து நாதருடைய திரு சரீரமும், திரு இரத்தமும், திரு ஆன்மாவும், தெய்வசுபாவமும் அடங்கி இருக்கிற அருளடையாளம் அது. இதையே புனித தாமஸ் அக்வினாஸ் “அறிவினையும் எம் ஆற்றலையும் கடந்த இம்மாபெரும் புதுமையினை. உம் அருளாம் அருள் மொழியால் உறுதியுடன் ஏற்றிட செய்யும்” என்று பாடியுள்ளார். புனித அந்தோணியார் ஒரு முறை நற்கருணையை ஏந்தி வரும் போது கழுதை குட்டியும் அதற்குமுன் முழந்தாளிட்டு வணங்கியதாம். நாம் நற்கருணைக்கு செலுத்தும் மரியாதை என்ன? “எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால், அல்லது ஆண்டவரின் கிண்ணத்தை பருகினால் அவர் ஆண்டவரின் உடலுக்கும், இரத்தத்திற்கும் எதிராக குற்றம் புரிகிறார்” என்று புனித பவுல் கொரிந்து நகர மக்களுக்கு அறிவுரை கூறியுள்ளார். நாம் எவ்வகை தயாரிப்புக்களுடன் இந்த மாண்புயர் அருட்சாதனத்தை உட்கொள்கிறோம்? இடைவிடாமல் நமக்காக நற்கருணை ஆலயங்களில் காத்திருக்கும் இயேசுவை நாம் சந்திக்கிறோமா? இறைவார்த்தைக்கும் நற்கருணைக்கும் கொடுக்க வேண்டிய மரியாதையை நாம் கொடுக்கின்றோமா? சிந்திப்போம் ........

செபம்: வீழ்ந்து எழுந்த இயேசுவே! எம் வீழ்ச்சியில் எமக்கு திடமளிக்க இறைவார்த்தையையும், நற்கருணையையும் தந்துள்ளீர். நாங்கள் ஆர்வமுடனும் தகுந்த தயாரிப்புகளுடனும் அவற்றை ஏற்க அருள் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## பத்தாம் நிலை – இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
“என் ஆடைகளைத் தங்களிடையே பங்கிட்டுக் கொள்கின்றனர்; என் உடையின்மேல் சீட்டுப் போடுகின்றனர்” – திருப்பாடல்: 22: 18

சிந்தனை:
வானத்துப்பறவைகளையும், வயல்வெளி மலர்களையும் உடுத்தி மகிழ்ந்தவர், ஆடையின்றி நிற்கிறார். இழப்பதற்கு இனி உயிரைத் தவிர ஒன்றும் இல்லை. இன்றும் துகில் உரியும் நிகழ்வுகளை நாம் அரங்கேற்றிக் கொண்டுதான் இருக்கிறோம். நிலத்தின் நிர்வாணத்தை மூடி மறைக்க படைத்தவன் பல வண்ண செடி கொடிகளை வைத்து நிலமகளை உடுத்தினான். பறப்பன, ஊர்வன, நடப்பன என அனைத்தையும் படைத்து அவற்றின் மேல் அதிகாரத்தை மனிதருக்கு கொடுத்தான். முதல் மனிதன் ஆதாம் – 930 ஆண்டுகளும், அவர் மகன் சேத்து – 912 ஆண்டுகளும், அவர் மகன் ஏனோசு - 905 ஆண்டுகளும், இவர்கள் வழி வந்த நோவா – 950 ஆண்டுகளும், பின்னர் ஆபிரகாம் – 175 ஆண்டுகளும், ஈசாக்கு – 180 ஆண்டுகளும் வாழ்ந்தனர் என்று தொடக்க நூல் கூறுகிறது. ஆனால் இப்பொது ஒரு மனிதனின் சராசரி ஆயுள் காலம்: 65லிருந்து 80 வயதாகும். இந்த தகவலை சற்று ஆய்ந்தால், பாவம் அதிகமாக அதிகமாக ஆயுள் காலம் குறைவதையும், இயற்கையை மாசுபடுத்த மாசுபடுத்த ஆயுள் காலம் குறைவதையும் உணரலாம். நாம் அனுதினம் இயற்கை வளங்களை சிதைத்து, படைப்பை உருகுலைத்த போதெல்லாம் இயேசுவின் ஆடைகளை தான் உரிகிறோம். இதனால் தான் சுனாமி, பூகம்பம், நிலச்சரிவு போன்ற இயற்கை சீற்றங்கள் வருகின்றன.
“ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீடு அவசியம். மனித குடும்பத்திற்கு இறைவன் “அனைத்தையும் ஆளுங்கள்” என்று கூறி அளித்த இந்த உலகமே வீடு. இந்த வீட்டை நாம் அனைவரும் பேணிக்காக்க வேண்டும்” என்று நமது திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் கூறியுள்ளார். 2011 டிசம்பர் 11 அன்று நடந்த கேரள ஆயர்கள் பேரவை ‘இறைமக்கள் இயற்கைக்கு எதிராக செய்யும் பாவங்களையும் ஒப்புரவு அருட்சாதனத்தின் போது கூற தூண்ட வேண்டும்’ என்று பரிந்துரைத்தது. இக்காலத்தில் மறைக்கல்வி நமக்கு இயற்கை பாதுகாப்பையும் புகட்ட வேண்டும். நாம் எத்தனை மரங்களை வெட்டி வீழ்த்தியிருப்போம், எத்தனை முறை கழிவுகளால் உலகை மாசுப்படுத்தி இருப்போம்? சிந்திப்போம் …………

செபம்:
எங்களுக்காக ஆடை உரிக்கப்பட்ட இயேசுவே! நாங்கள் இயற்கையை பாதுகாத்து, யாம் வாழும் பூமி எமக்கு நீர் கொடுத்த செல்வம் மட்டுமல்ல, நாங்கள் எங்கள் அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச்செல்ல வேண்டிய பொக்கிஷம் என்பதை உணர்ந்து வாழ வரமருளும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## பதினொன்றாம் நிலை – இயேசுவை சிலுவையில் அறைகின்றார்கள்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
“நம் குற்றங்களுக்காக அவர் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்” - எசாயா: 53: 5

சிந்தனை:
இயேசுவை சிலுவையில் அறையும் போது, அவர் கைகளில் பதிக்கப்படிருந்த ஆணிகள், காலில் இருந்த ஆணியைப் பார்த்து, “ நாங்கள் உன்னைவிட உயர்ந்தவர்கள்” என்று சொல்லிக்கொண்டனவாம். அதை கேட்ட சிலுவை: “உள்ள இடங்கள் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் தன்மையிலும், அமைப்பிலும் மூவரும் சமமே!” என்றதாம். இறுதி இராஉணவிற்கு பின் இயேசு செய்த நெடும் வேண்டுதலில் ஒரு முக்கியமான பகுதி: “தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களை காத்தருளும்” என்பதாகும். நாம் கற்கும் மறைக்கல்வி நம்மை ஒன்றிணைக்க வேண்டும். பல கோதுமை மணிகளும், திராட்சை பழங்களும் சிதைக்கப்பட்டு அப்பமாகவும், இரசமாகவும் மாறுகின்றன. நாமும் நமது சுயநல நாட்டங்கள், சாதி பிணைப்புகள் முதலியவற்றை சிதைத்து ஒற்றுமையுடன் செயல்பட்டால் தான் கிறிஸ்துவாக மாறமுடியும். நாம் வழிபடும் கடவுள் ஒருவரே, நாம் அறிக்கையிடும் விசுவாசமும் ஒன்றே. நம் அனைவருக்கும் ஒரே முறையில் தான் மறைக்கல்வி போதிக்கப்படுகிறது. நம்மில் உயர்ந்தவர் என்றோ, தாழ்ந்தவர் என்றோ வேற்றுமை இல்லை. ஏனெனில் நாம் உட்கொள்ளும் நற்கருணை நம்மை ஒன்றிணைத்துள்ளது.

- நான் இவர்களோடு தான் சேருவேன்
- இவர்கள் எனக்கு தேவை இல்லை
- இவர் இந்த கூட்டத்தில் இருந்தால் நான் அதில் பங்குகொள்ள மாட்டேன்

என்று நாம் எண்ணம் கொண்டுள்ளோமா? அதனை மாற்ற முற்படுவோம். சிலுவையில் அறையப்படுவது மிகுந்த வேதனையை தரும். அது போல நமது சுய நாட்டங்களை அறைந்து பிறருக்காக விட்டுக்கொடுப்பது, பிறருடன் ஒன்றித்து வாழ்வது முதலில் கடினமாகத்தான் இருக்கும். சிலுவை மரணத்தை ஏற்க தைரியம் தேவை. மேற்கூறியவற்றை செயல்படுத்தவும் தைரியம் தேவை. பங்கில், குடும்பத்தில், சமுதாயத்தில் ஒன்றுமைக்கு நான் எவ்வகைகளில் கலகம் விளைவித்தேன் என்று சிந்திப்போம்.

செபம்:
தந்தையோடும் தூய ஆவியோடும் ஒன்றிப்பில் வாழும் இயேசுவே! நாங்கள் அனைவரும் ஒன்றுமையுடன் செயல்பட மனவலிமை தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## பன்னிரெண்டாம் நிலை – இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
“ஏறக்குறைய நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. கதிரவன் ஒளி கொடுக்கவில்லை. திருக்கோவிலின் திரை நடுவில் கிழிந்தது” – லூக்கா: 23: 44

சிந்தனை:
இயேசுவின் போதனைகளில் மிகவும் உயர்ந்தவை, அர்த்தமுள்ளவை – அவர் சிலுவையில் தொங்கும் போது மொழிந்த அந்த ஏழு அமுத மொழிகள். அவற்றை இப்போது தியானிப்போம்: இதுவே மறைக்கல்வியின் ஊற்றும் தொடக்கமும் ஆகும்.
துன்ப சிலுவையில் தொங்கிய இயேசு அன்புடனே ஒரு அருள்மொழி சொன்னார்:
“தந்தாய் இவரைத் தாம் மன்னிப்பீர்; செய்வதறியாது செய்கின்றார்கள்!”
பக்கத்திருந்த பணிபிலாத் திருடன், “மீட்பர் நீரோ மீட்பீர் உமையே வேதனையின்றி மீட்பீர் எமையே!” என்றான். உடனே இன்னொரு திருடன் அவனது வாயை அடக்கிய பின்பு இயேசுவைப் பார்த்து இன்முகத்தோடு, “தேவகுமாரா! திருஅவதாரா! ஏகும் இடத்தில் இறைவனின் அரசில் எனையும் அழைத்து என்னை மீட்டு பாவம் தீர்த்து பக்கம் வைப்பீர்!” என்றான். உடனே இயேசுவும் நோக்கி, “இன்றே நீயும் என்னுடன் அந்தப் பரலோகத்தில் பக்கத்தில் இருப்பாய் உள்ளம் இதுவே உரைத்தோம்” என்றார்! பிற்பகல் நேரம் பெருகிய வானம் இருநாழிகைகள் இருளில் ஆழ்ந்தது! கண்ணீர் சிந்திக் கலங்கியவாறு சிலுவையின் அருகே தேவ அன்னை மரியாளோடும் மற்றொரு பெண்ணும் அருளப்பர் எனும் அன்பு சீடரும் நின்றார். அவரை நேரில் நோக்கி, இயேசு பெருமான் இருவரை விளித்து “அம்மா அவர் உன் அன்பின் மைந்தன் அருளப்பா அவர் அன்னை உனக்கு” என்றே அவரை அன்பில் இணைத்தார்! மூன்று மணிக்கு மோகன மன்னன் தோன்றிய தேதோ சொல்லை உயர்த்தி சத்தம் இட்டார் தாரணி ஒடுங்க! “இறைவா! இறைவா! என்னை எனோ கைவிட்டாயே! கைவிட்டாயே! என்றார். உடனே இருந்த சிலபேர் “எலியாஸ் தன்னை இவன் அழைக்கின்றான் என்றே அவரை ஏளனம் செய்தார்! மரண நேரம் வந்ததென்றெண்ணி வேதன் கூற்றை விளக்கிடுமாறு, “தாகம்” எனக்கென சாற்றினார் இயேசு! ஆத்மதாகத்தை அவர் சொன்னாரென அறியாதிருந்த ஐந்தறிமாக்கள் கடலில் எடுத்த காளான் தன்னை காடியில் தோய்த்து கட்டையில் நீட்டினர்! அதையும் பெற்ற அன்பின் மைந்தன், “எல்லாம் முடிந்தது!” என்று நவின்றார்! எல்லாம் என்ற சொல்லின் பொருளை நல்லோர் யாவரும் நன்றே அறிவார்! இந்த உலகில் நான் ஏற்றதோர் கடமை எல்லாம் முடிந்தது என மனம் நிறைந்தார்! “அன்பு தந்தையே! அன்பு தந்தையே! ஆத்மாவை உன் அன்புக் கரங்களில் இப்பொழுதே நான் ஒப்படைக்கின்றேன்!” என்றார் இயேசு; சென்றது உயிரே!!!!!

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## பதிமூன்றாம் நிலை – இயேசுவின் உடலைத் தாயின் மடியில் கிடத்துகிறார்கள்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:

“அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார்”

– லூக்கா: 2: 51

சிந்தனை:

**அன்று தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத்தம்மாள் “பெண்களுள் பேறு பெற்றவர் நீர். உம் வயிற்றின் கனியும் பேறுபெற்றதே!” என்று அன்னை மரியை வாழ்த்தினார். ஆம் கன்னி மரியாள் பெண்களுள் பேறுபெற்றவர்.**

**இளம் வயதில் வானதூதர் கூறவது என்னவென்று அறியாமல் ‘ஆகட்டும்’ என்று இறையடி பணிந்தவர் இந்த அமலோற்பவ அன்னை. கன்னியாக கரு சுமந்த போது பலரின் ஏளனப் பேச்சுக்களை பொறுத்துக் கொண்டவர் இந்த எதிர்நோக்கி காத்திருந்த அன்னை. வயிற்றின் கனியை ஈன்றெடுக்க இடம் இல்லாமல் தவித்தபோதும் பொறுத்துக்கொண்டார் இந்த வழித்துணை அன்னை. கானாவூர் திருமணத்தில் மகன் முதல் புதுமை செய்ய தூண்டுதலாய் இருந்தவர் இந்த சகாய அன்னை. இப்போது இறந்த தன் மகனை மடிசுமந்து வியாகுல அன்னையாக காட்சியளிக்கிறார். பழைய ஏற்பாட்டில் ஆதாமும் ஏவாளும் இறைவனுக்கு கீழ்படியாமல் இறையுறவை இழந்தனர். புதிய ஏற்பாட்டில் இயேசுவும் அன்னை மரியாளும் இறைவனுக்கு பணிந்து இறையுறவை மீட்டுத்தந்தனர். இவர்களை போல இறைவனின் உறவில் நம்மை நிலைக்க செய்ய, எல்லாருக்கும் எல்லாமாய் இருக்க அழைக்கப்பட்டவர்களே! ‘குருக்களும் துறவிகளும்’. நமது ஞான மேய்ப்பர்களுக்கு நம்மால் ஆன உதவிகளை செய்வது என்பது திருச்சபை நமக்கு தந்துள்ள ஆறு கட்டளைகளுள் ஒன்று. இது நாம் மறைக்கல்வியில் கற்ற ஒரு அடிப்படை பாடம்.**

**இவர்களும் மனிதர்கள் தான்! எல்லா இக்கட்டுகளுக்கும் உட்பட்டவர்கள் தான்! இவர்கள் அழைப்பில் நிலைத்து நிற்க, இவர்கள் பணி சிறக்க நம்மில் எத்தனை பேர் செபிக்கின்றோம்? நமது தவறான கருத்துக்களால் எத்தனை குருக்கள், துறவியரை மனம் வருந்த செய்திருப்போம்? இவர்களும் நம் குடும்பத்தில் ஒருவர் என்ற பந்த உணர்வு நம்மிடம் உள்ளதா? அன்னை மரி ஈன்ற ஒரே கனியையே உலகிற்கு காணிக்கை ஆக்கினாள். என் வயிற்றில் பிறந்த பிள்ளை பிறர் பணி செய்ய வேண்டும் என்ற ஆவல் நம்மில் உள்ளதா? நாம் கற்கும் மறைக்கல்வி நம்மை பிறர் பணி செய்ய அழைத்துச்செல்ல வேண்டும். இந்த சவால்களை ஏற்க நாம் தயாராக இருக்கின்றோமா? சிந்திப்போம்.....**

செபம்:

**நித்திய குருவாகிய இயேசுவே! எம் பாப்பரசர், ஆயர்கள், குருக்கள், துறவியருக்காக வேண்டுகிறோம். அவர்களுக்கு நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை சரிவர செய்யவும், எம் பங்கில் தேவ அழைத்தல் பெருகவும் உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.**

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

## பதினான்காம் நிலை – இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கின்றனர்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இறைவார்த்தை:
“ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார்” – 2 கொரிந்தியர்: 5: 17

சிந்தனை:
நாம் நமது பயணத்தின் இறுதி நிலையை அடைந்துவிட்டோம். ஆனால் நாம் முழு நிலையை அடைய வேண்டாமா? உங்கள் பதில் ‘ஆம்’ என்றால், இந்த சிலுவைப்பாதை நாம் ஏனோதானோ என செய்த ஒரு பக்திமுயற்சியாக இருக்கக்கூடாது. ஆனால் நிலைவாழ்வுக்கு நம்மை தயாரிக்கும் ஒரு தருணமாக இருக்க வேண்டும். அப்போது தான் நாம் இயேசுவோடு பயணம் செய்தவர்கள் என்று ஆணித்தரமாக கூற முடியும். நமது தீய எண்ணங்கள் இங்கு புதைக்கப்பட வேண்டும்.
பகைமையை புதைப்போம் – பாசத்தில் உயிர்ப்போம்
வேதனையை புதைப்போம் – மன்னிப்பால் உயிர்ப்போம்
கலக்கத்தை புதைப்போம் – நம்பிக்கையால் உயிர்ப்போம்
தன்னலத்தை புதைப்போம் – பிறர் பணியில் உயிர்ப்போம்
விசுவாச தளர்ச்சியை புதைப்போம் – மறைக்கல்வியால் உயிர்ப்போம்
ஆறுதல் பெறுவதை விட ஆறுதல் அளிக்கவும்
பிறர் என்னை புரிந்துகொள்ள விரும்புவதைவிட பிறரைப் புரிந்து கொள்ளவும்
பிறருடைய அன்பை அடைய ஆசிப்பதைவிட பிறருக்கு அன்பை அளிக்கவும் வேண்டுவோம்.
ஏனெனில் கொடுக்கும் பொழுது மிகுதியாக பெறுகிறோம்
மன்னிக்கும் போது மன்னிப்பை அடைகிறோம்
மரிக்கும் பொழுது நித்திய வாழ்விற்கு பிறக்கிறோம்.
நாம் அன்றாடம் கற்றுக்கொள்ளும் மறைக்கல்வி நம்மை எங்கு கூட்டிச்செல்லவேண்டும்?

- நலிந்தோருக்கு உதவி செய்ய, அழுவோருக்கு ஆறுதல் அளிக்க
- ஏழைக்குழந்தைகளின் கல்விக்கு உதவ, நம் இல்லங்களில் செப சூழலை ஏற்படுத்த
- பசித்தோருக்கு உணவளிக்க, நீதிக்காக தோள் கொடுக்க
- இறைவார்த்தைக்கு உருகொடுக்க, அன்பியங்களை கட்டியெழுப்ப
- அமைதியின் தூதுவர்களாக மாற.

இத்தகைய சான்று வாழ்விற்கு நம்மையே கையளிக்க இறைஉதவியை நாடுவோம்.

செபம்:
இயேசுவே எங்கள் நல்ல ஆயரே! நாங்கள் மறைக்கல்வியில் கற்றுக்கொண்ட பாடங்களுக்கு வாழ்வில் செயல்வடிவம் கொடுக்க ஆற்றலைத் தாரும். ஆமென்.
எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.